

කාර්ය සාධන වාර්තාව

செயலாற்றல் அறிக்கை

Performance Report

2021

ප්‍රාථමික සෞඛ්‍ය සේවා, වසංගත රෝග හා කොවිඩ් රෝග පාලන කටයුතු රාජ්‍ය අමාත්‍යාංශය

ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

State Ministry of Primary Health Care, Epidemics and COVID Disease Control



2021 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கை

ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

செலவின விடயம் இல: 441

ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

இரண்டாம் மாடி, இல. 525, யூனியன் பிளேஸ், கொழும்பு 02

.E-Mail: covidsecretaryoffice@gmail.com

உள்ளடக்கம

அத்தியாயம் 01 - நிறுவன விபரம் 1-5

1.1 அறிமுகம் 1

1.2 அமைச்சின் தொலைநோக்கு செயற்பணி நோக்கங்கள் 2

1.3 பிரதான தொழிற்பாடுகள 3

1.4 அமைப்பு வரைபடம 4

1.5 அமைச்சின் மேற்பார்வைக்கு உட்படும் நிறுவனங்கள் 5

அத்தியாயம் 02 - செயன்முன் னேற்றமும் தொலைநோக்கும் 6-8

2.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் 2021 இன் பிரகாரம் செயன்முன்னேற்றமும்வெற்றிகளும 6

2.2 சவால்கள் 7

2.3 எதிர்கால இலக்குகள் 8

அத்தியாயம் 03 -2021திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரட்டிய செயலாற்றல் கூற்று 9-22

3.1 நிதிச் செயலாற்றல் கூற்று 9

3.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று 11

3.3 காசுப்பாய்ச்சல் கூற்று 12

3.4 நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 13

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றல 13

3.6 ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாட்டை பயன்படுத்தும் செயலாற்றல 13

3.7 நி.பி 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் திணைக்களங்கள் 13

3.8 நிதியல்லாத சொத்துக்கள் அறிக்கையிடல் செயலாற்றல் 14

3.9 கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 15

அத்தியாயம் 04 - செயலாற்றல் குறிகாட்டி 23-24

4.1 நிறுவனத்தின் செயலாற்றல் குறிகாட்டி 2021 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தினை அடிப்படையாக கொண்டு 23

4.2 எதிர்பார்த்த செயலாற்றலை அடைந்து கொள்ள முடியாமை நியாயப்படுத்தல் 24

அத்தியாயம் 05 - நிலைபேறான நோக்கங்களை (ளுனுபு) நிறைவேற்றும் செயலாற்றல் 25-27

5.1 இந்த இராஜாங்க அமைச்சிற்குரிய இனங்காணப்பட்ட உரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் (ளுனுபு) 25

5.1.1 அறிமுகம் 25

5.1.2 இணங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் (ளுனுபு) பயன்பாடு 26

5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றுவதில் வெற்றிகளும் சவால்களும் . 27

அத்தியாயம் - 06 - மனிதவள விபரக் குறிப்பு 28-31

6.1 ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம் 28

6.2 நிறுவனத்தின் செயலாற்றலை நோக்கி மனித வளங்கள் பற்றாக்குறை தாக்கமளித்துள்ள விதம் 29

6.3 நிறுவனத்தின் செயலாற்றலை நோக்கி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பங்களிப்பு 31

அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை 32-38

அத்தியாயம் 01
நிறுவன விபரம்

1.1 அறிமுகம்

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2020.12.11 ஆந் திகதிய 2205/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு நிறுவப்பட்டது. இந்த இராஜாங்க தமது விடயப் பரப்பு அமைச்சரவைஅந்தஸ்துள்ள சுகாதார அமைச்சின் ஈடுபாட்டுடனும் கூட்டிணைப்புடனும் தமது செயற்பணியை நிறைவேற்றுகின்றது

இந்த அமைச்சு இலங்கையில் சமூகத்திலிருந்து ஓரங்கப்பட்ட மற்றும் பின்தங்கிய மற்றும் குறைந்த வருமானம் கொண்டவர்களாக அல்லது அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் இனங்காணப்பட்ட சிரேஷ்ட பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த அமைச்சு தமது பணிகளை நிறைவேற்றுகின்றது.

அமைச்சின் செயற்பணிக்கு அமைய 2021 ஆம் ஆண்டிற்கு கிடைத்திருந்த நிதிஏற்பாடுகளுக்கு இணங்க இந்த அமைச்சு ஸ்தாபிக்கப்பட்ட ஆரம்ப நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது.

இந்த அமைச்சின் நேரடி மேற்பார்வைக்கு உட்படும் சமூக சேவைகள் திணைக்களம், தேசிய முதியோர் செயலகம், 1990 சுவசரிய மன்றத்தினதும் பிரதான நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக உரிய இராஜாங்க அமைச்சாக பிரதான செயற்பாடுகளை மேற்கொள்கின்றது.

அவ்வாறே மேற்படி தேசிய மட்டத்தில் ஒழுங்கு செய்யப்படுகின்ற சகல நிகழ்ச்சிகளையும் உற்சவங்களையும் தேவையான மேற்பார்வை மற்றும் ஆலோசணைகளை வழங்குதல் இடம்பெறுவதுடன் அதன் மூலம் குறைந்த கவனம் செலுத்தப்பட்ட சமூகம் தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு முடியுமாக இருந்தது.

அத்தோடு திணைக்களம், நிறுவனங்கள் மற்றும் இந்த அமைச்சின் கீழ் உள்ள உத்தியோகத்தர்களின் அறிவு, எண்ணங்கள் போன்றவற்றை மேம்படுத்துவதற்கும் பயிற்சி செயலமர்வுகளை ஒழுங்கமைத்து ஊழியர் விருப்பம் மற்றும் செயற்திறன் மேம்படுத்தப்பட்டு உள்நாட்டு வெளிநாட்டு பயிற்சி தேவைப்பாடுகளுக்கு அனுப்புவதற்காக நடவடிக்கை எடுக்கின்றது.

உலகலாவிய கொவிட் 19 தொற்று நிலைமையின் கீழ்ம ஆண்டில் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய காலப்பகுதியொன்று முழு நாட்டிற்குமே தனிமைப்படுத்தல் மற்றும் ஊரடங்கு அமுலாக்கப்பட்டது. தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை நீக்கிய போதும் குறைந்த பதவியணியினைக் கொண்டு அலுவலக வேலைகளை மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட ஆலோசணையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தமை காரணமாக ஆட்கள் ஒன்று கூடாமல் இருப்பதற்கு வழங்கிய ஆலோசரணைகளை பின்பற்ற வேண்டியிருந்ததால் ஏனைய வருடங்களைப் போன்று அனைத்து செயற்பாடுகளையும் அதன் பிரகாரம் மேற்கொள்வதற்கு தடைகள் ஏற்பட்டன.

எவ்வாறாயினும் தடைகள் மத்தியிலும் இந்த இராஜாங்க அமைச்சினால் குறைநிரப்பு மதிப்பீடொன்று மூலம் நிதிஏற்பாடு பெற்றக்கொள்ளப்பட்டு 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து நிகழ்ச்சிகள் இந்த அறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் செலவினத் தலைப்பு 441 இன் கீழ் 2021 ஆம் ஆண்டிற்காக திரட்டிய செயலாற்றல் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.2 அமைச்சின் தொலைநோக்கு செயற்பணி நோக்கங்கள

தொலைநோக்கு

சமூகத்தின் கவனத்திலிருந்து ஓரமாக்கப்பட்ட மக்களின் உரிமைகளை உறுதி செய்தல் மற்றும் அனைத்து இலங்கையர்களின் உயிர்களையும் பாதுகாத்தல்.

செயற்பணி

இலங்கையில் வாழும் மக்களால் கண்டுகொள்ளப்படாத சமூகமான "விசேட தேவைகள்" உடைய ஆட்களையும் சிரேஷ்ட பிரஜைகளை இனங்காணுதல், அவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துதல் மற்றும் இலங்கை மக்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்காக வசதிகளை வழங்குதல்

நோக்கங்கள்

- 1990 சுவசெரிய மன்றத்தின் மூலம் செயற்படுத்தப்படும் பிணியாளர் வண்டி சேவைகளை மேலும் விரிவுபடுத்துவுதற்காக தேவையான நிதிஏற்பாடுகளை வழங்குவதன் மூலம் மக்கள் தேவைகளை நிறைவேற்றுதல்.
- விசேட தேவைகளையுடைய பிள்ளைகளின் வாழ்வாதார பயிற்சி சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவுதற்காக கொள்கைகளை தயாரித்தலும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை பாதுகாத்தலும
- விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகளுக்கான வழிகாட்டுதல் தொடர்பான கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் தொடர்புடைய செயல்பாடுகளை ஒருங்கிணைப்பு மூலம் அவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பது.
- போதைப் பொருட்களுக்கு அடிமையானோரை புனர்வாழ்வழிப்பற்காக வசதிகளை மேம்படுத்துவதற்கு ஆலோசணை வழங்கலும் வழிகாட்டலும்
- சிரேஷ்ட பிரஜைகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்குரிய கொள்கைகளை தயாரிப்பதினூடாக அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தலும் அமுலாக்கலும
- முதியோருக்கான தேசிய மன்றத்தின் தலைவராக இந்த இராஜாங்க அமைச்சின் செயலாளர் உத்தியோகபூர்வமாக நியமனம் செய்யப்படுவதால் முதியோருக்கான தேசிய மன்றத்தின் நேரடி கண்காணிப்பு மற்றும் வழிகாட்டுதல்

1.3 பிரதான தொழிற்பாடுகள

- சமூக சேவைகள் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான செயற்பாடுகளை மேற்பார்வை செய்தலும் தேவையான ஆலோசணைகளையும் வழங்குதல

- தேசிய முதியோர் செயலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான செயற்பாடுகளை மேற்பார்வை செய்தலும் தேவையான ஆலோசணைகளை வழங்குதலும்

- 1990 சுவசெரி மன்றத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான செயற்பாடுகளை மேற்பார்வை செய்தலும் தேவையான ஆலோசணைகளை வழங்குதலும்

- முதியோருக்கான தேசிய பேரவை தொடர்பான சகல கடமைகளையும் மேற்பார்வை செய்தலும் செயற்படுத்தலும்


- பார்வையற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கை பொறுப்பு நிதியம் தொடர்பாக அனைத்து கடமைகளையும் மேற்பார்வை செய்தலும் செயற்படுத்தலும்

- சுவசரிய விற்காக தேவையான பிணியாளர் வண்டிகளை கொள்வனவு செய்வது தொடர்பான ஏனைய பணிகளைச் செய்தல்

- நிறுவனங்கள் மற்றும் அமைச்சுக்களின் உத்தியோகத்தர்களின் அறிவு, திறன்கள் மற்றும் எண்ணங்களை மேம்படுத்துவதற்கு தேவையான பயிற்சிகளை நடத்துதல், செயலமர்வுகளை ஒழுங்கு செய்தல் மற்றும் தேவையான ஒத்துழைப்பினை வழங்குதல்.

- வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் அதன் பிரகாரம் செயலாற்றல் திட்டத்தை தயாரித்தல்

1.4 அமைப்பு வரைபடம



1.5 அமைச்சின் மேற்பார்வைக்கு உட்படும் நிறுவனங்கள்

1. 1990 சுவசரிய மன்றம்
2. சமூக சேவைகள் திணைக்களம்
3. தேசிய முதியோர் செயலகம், முதியோருக்கான தேசிய பேரவை

1. சுவசரிய மன்றம்

அறிமுகம்

"1990 சுவசரிய" இலவசமாக வழங்கப்படும் பிணியாளர் வண்டி சேவையாகும். இலங்கையில் முதலாவது தடவையாக 2016 யூலை 28 ஆந் திகதி தெற்கு, மேல் மாகாணங்களில் முழுமையாக 88 பிணியாளர் வண்டிகளுடன் இலங்கையில் ராஜகிரியாவில் அமைந்துள்ள அவசர கட்டளையிடல் மற்றும் கட்டுப்பாட்டு நிலையத்தின் மூலம் தமது முதலாவது பயணத்தை ஆரம்பித்தது. நாடு முழுவதும் சிறப்பான மற்றம் தரமான முன் வைத்தியசாலை அவசர உதவிச் சேவைகளை வழங்குவதற்காக தற்போது 297 பிணியாளர் வண்டிகள் முழு நாட்டிற்கும் தேவையாக உள்ளது.

2. சமூக சேவைகள் திணைக்களம்

அறிமுகம்

மாற்றுத்திறனாளி சமூகத்தை இலக்காகக் கொண்டு, அவர்களின் சமூக மற்றும் பொருளாதார இருப்பை பாதுகாப்பதற்காக ஊனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சி வழங்குதல், அவர்களை வேலைவாய்ப்பு மற்றும் சுயதொழில் செய்ய வழியமைத்தல், சமூக அடிப்படையிலான புனர்வாழ்வு திட்டங்களின் மூலம் ஊனமுற்ற சமூகத்தை மேம்படுத்துதல், போதைக்கு அடிமையானவர்கள், விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு மறுவாழ்வு வழங்குதல் மூலம் அவர்களை கல்விக்காக தொடர்புபடுத்தல் உட்பட பல செயற்பாடுகளை சமூக சேவைகள் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

3. தேசிய முதியோர் செயலகம் மற்றும் முதியோருக்கான தேசிய பேரவை அறிமுகம்

2011 இன் 5 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 2000 இன் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் மூலம் முதியோரின் சேமநலன் மற்றும் உரிமைகளை பாதுகாப்பதற்காக முதியோருக்கான தேசிய மன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதுடன் அதன் நிர்வாக செயற்பாடுகளுக்காக தேசிய முதியோர் செயலகம் தாபிக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 02
செயன்முன் னேற்றமும் தொலைநோக்கும்

2.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் 2021 இன் பிரகாரம் செயன்முன்னேற்றமும் வெற்றிகளும்

1. விருப்பமான வேலைச்சூழல் ஒன்றை உருவாக்குவதற்காக இடவசதிகளுடன் இடமொன்றை இராஜாங்க அமைச்சினை தாபித்தல் இடம்பெற்றுள்ளது

- அமைச்சரவை அங்கீகாரம் 2021.08.17 இல் கிடைத்தது
- கொலன்னாவ அரச தொழிற்சாலைக்கு கட்டிட அபிவிருத்தி செயற்பாடுகள் கையளிப்பு 2021.09.02 இல் இடம்பெற்றுள்ளது.
- மின்சாரம், நீர், காற்றுச் சீராக்கி வசதிகள் என்பன பெற்றுக்கொள்ளப்பட்டன.
- அலுவலக உபகரணங்கள். கணனி, எழுதுகருவிகள் போன்ற அத்தியவசிய பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- இராஜாங்க அமைச்சின் லெுவலக செயற்பாடுகள் சுப நேரத்தில் ஆரம்பித்தல் 2021.12.30 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டது. பதவியணியினர் உடன் கடமைகள் 2022.01.03 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

2. தாமதமின்றி சேவைகளை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்த தகுதியான பதவியணியினரை பெறும் செயல்பாடுகள் 31.12.1221 இல் ஓரளவு நிறைவேற்றப்பட்டுள்ளது.

- 01.07.2021 இற்குள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் பதவியணி அங்கீகரிக்கப்பட்டது.
- இருப்பினும், 31.12.2021 இல் உள்ளவாறு ஒரு சில அத்தியாவசிய பதவிகள் தவிர மற்ற அனைத்துப் வெற்றிடங்களும் நிரப்பப்படவில்லை. (இது மனித வள வளங்கள் பக்க விபரத்தின் அத்தியாயம் 06 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.)
- புதிய பதவியணியினர்களுக்கு பணியிடத்தில் (on the job training பயிற்சி அளிக்கப்பட்டது.

3. செயற்திறமையான நிதி முகாமைத்துவத்தை ஏற்படுத்துவதற்காக இதுவரை சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு செயல்முறையானதுஇந்த இராஜாங்க அமைச்சிற்கு கையேற்கப்பட்டது.

- 21.07.2021 முதல் தலைமைக் கணக்காளர் ஒருவர் (தரம் 1சேவையில் உள்ளார்
- 2021 ஒக்டோபர் முதல் குறைநிரப்பு மதிப்பீட்டைத் தயாரித்து, அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் பாராளுமன்ற அங்கீகாரத்தைப் பெறுவதன் மூலம் நமது இராஜாங்க அமைச்சிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- அதன்படி, ந.பி 135 அதிகாரங்களை வழங்குவதன் மூலம் பணக் கொடுப்பனவு செயல்முறை நெறிப்படுத்தப்பட்டது.

4. இந்த இராஜாங்க அமைச்சிற்குரிய சமூக சேவைகள் திணைக்களம், முதியோர்களுக்கான தேசிய செயலகம் மற்றும் 1990 சுவசரிய மன்றம் ஆகியவற்றுடன் நெருக்கமான ஒருங்கிணைப்ப மேற்கொள்ளப்பட்டது.

- 1990 சுவசரிய மன்றத்திற்கு 'இடுகம' நிதியில் இருந்து 60 புதிய நோயாளர் காவு வண்டிகளை நன்கொடையாக வழங்கும் நடவடிக்கையில் ஜனாதிபதி செயலகம் ஈடுபட்டுள்ளது. பெறுகை செயற்பாடு சுகாதார அமைச்சினால் செய்யப்படுகிறது.

2.2 சவால்கள்

1. மிகக் குறைந்த பதவியணியினரைக் கொண்டு கடமைகளைச் செய்ய வேண்டியிருப்பதால் கடமைகளை முறையாகச் செய்ய முடியவில்லை. கணக்குப் பிரிவிற்கு ஒரு பெண் உத்தியோகத்தரும் ஒரு பட்டதாரி பயிலுனருரும் இணைக்கப்பட்டிருந்தனர், மேலும் நிறுவனப் பணிகளுக்காக உத்தியோகத்தர்கள் அவ்வப்போது விடயங்களை மாற்ற வேண்டியிருந்தது. (இந்தப் பட்டதாரி பயிலுனர்கள் அவ்வப்போது எமது அமைச்சில் பணிபுரிந்து வருவதால் விடயப் பிரிவினை அவ்வப்போது மாற்ற வேண்டியதது.

2. பதவிநிலை உத்தியோகத்தர் பதவிகளை பூர்த்தியடையாததால் கண்காணிப்பு பணியில் சிரமம் ஏற்பட்டது. ஒரே உத்தியோகத்தர் பெறுகை குழு அல்லது பிற குழுக்களுக்கு பரிந்துரைக்கப்பட்டார்.

3. பிரதான கணக்காளராக (தரம் 1) முதற்கட்ட நியமனம் பெறுவது, உதவிச் செயலாளராகப் புதிய உததியோகத்தர் அமர்த்தப்பட்டமை, சிரேஷ்ட உதவிச் செயலாளர், திட்டமிடல், கணக்காளர், உள்ளக கணக்காய்வாளர் பதவிகள் வெற்றிடங்களாக இருப்பது பணிகளைச் செய்வதில் பெரும் சவாலாக இருந்தது.

4. சுகாதார அமைச்சின் ஒரு அறையில் இராஜாங்க அமைச்சின் அலுவலகத்தை பராமரிப்பது ஆண்டு முழுவதும் பெரும் சவாலாக இருந்தது. அமைச்சின் செயலாளர் உட்பட ஊழியர்களுக்கு அந்த அறையில் உள்ள மேசைகள் மற்றும் நாற்காலிகள் சுகாதார அமைச்சிலிருந்து பெற்றுக்கொள்ள நேர்ந்ததுடன் வேண்டும் மற்றும் கோவிட் COVID நிலை குறித்து அவ்வப்போது உத்தியோகத்தர்களை அழைத்து சமாளிக்க வேண்டியிருந்தது.

5. குறைநிரப்பு மதிப்பீடு மூலம் 2021 ஒக்டோபர் முதல் இராஜாங்க அமைச்சிற்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்படுவதுடன், இது புதிய உத்தியோகத்தர்களுடன் முறையான கணக்கீட்டு செயல்முறையை மாற்றியமைப்பது கடினம். கணக்கீடு தொடர்பான எந்த அறிவு இல்லாத பட்டதாரி பயிலுனர்களுடன் தலைமைக் கணக்காளருக்கு அந்நடவடிக்கைகளை அவ்வாறே செய்ய வேண்டியிருந்தது, அமைச்சின் மேலதிக செயலாளர், உதவிச் செயலாளர் மற்றும் நானும் மிகவும் உறுதுணையாக இருந்தோம்.

2.3 எதிர்கால இலக்குகள்

1. இந்த இராஜாங்க அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாகச் செயற்படுவதற்குத் தேவையான அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் பதவிகளுக்கு உத்தியோகத்தர்களைப் பெற்று அமைச்சின் செயற்பாடுகளின் செயலாற்றலை அதிகரித்தல்
(அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை-80 பணியமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை-15)

2. 1990 சுவாசரிய மன்றத்திற்கு தேவையான அம்புலன்ஸ்களை வழங்குவதற்காக நடவடிக்கை எடுத்தல்.
"இதுகம" ஜனாதிபதி நிதியம் - 60 அம்புலன்ஸ்கள்
ADB / நிதியம் - 45 அம்புலன்ஸ்கள்

3. ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்றுநோயியல் மற்றும் கொவிட்நோயியல் இராஜாங்க அமைச்சாக பெயரிடப்பட்ட போதிலும், வர்த்தமானி அறிவிப்பின் மூலம் அதிகாரங்களை வழங்குவதில் தொடர்புடைய சட்டப்பூர்வ அமைப்புகளாக சுகாதாரத் துறையில் தொடர்புடைய நிறுவனங்கள் இல்லாமை மற்றம் அதன் அதிகாரங்கள் கையெளிக்காமை அடிப்படையல் அமைச்சின் பெயரின் பிரகாரம் செயற்ட முடியாதுள்ளது. அது தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் பொது கணக்கு குழுவிற்கும் இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் எமது இராஜாங்க அமைச்சிற்குரிய சமூக சேவைகள் திணைக்களம், முதியோர்களுக்கான தேசிய செயலகம் மற்றும் 1990 சுவசரிய மன்றம் என்பவற்றின் பிரகாரம் அமைச்சின் பெயருக்கு பொருந்தும் வகையில் திருத்தம் செய்யப்பட்டு வர்த்தமானியில் வெளியிடவோ அல்லது அதகாரமளிப்பொன்று வழங்குதல் எதிர்பார்க்கப்படுகிறது.

அத்தியாயம் 03
2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரட்டிய செயலாற்றல் கூற்று

3.1 நிதிச் செயலாற்றல் கூற்று

2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று

பாதீடு மீளாய்வாண்டு		குறிப்பு	உள்ளவாறான நடப்பாண்டு	உள்ளவாறான முன்னைய ஆண்டு	
-	**வருமானப் பெறுகைகள்**		-	-	
-	வருமான வரி	**1**	-	-	
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	**2**	-	-	**ஏசீஏ-1**
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	**3**	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	**4**	-	-	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-	-	
-	**வருமானமற்ற பெறுகைகள்**		-	-	
-	திறைசேரி பணி முற்பணங்கள்		41,810,000	-	**ஏசீஏ-3**
-	வைப்புகள்		402,221	-	**ஏசீஏ-4**
-	முற்பணக் கணக்குகள்		-	-	**ஏசீஏ-5**
	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்			-	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**42,212,221**	-	
-	**மொத்த வருமான பெறுவனவு**		**42,212,221**	-	
	திறைசேரிக்கு அனுப்புகை		**947479**	-	
	தேறிய வருமான பெறுவனவு		**41264742**	-	
	கழி : செலவினம்				
-	**மீண்டுவரும் செலவினம்**		-	-	
-	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	**5**	23,258,747	-	**ஏசீஏ-2(ii)**
-	ஏனைய பொருட்கள் சேவைகள்	**6**	19,784,623	-	
-	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	**7**	12,129,164,114	-	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	**8**	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	**9**	-	-	
-	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		**12,172,207,484**	-	
	மூலதனம் செலவினம்				
-	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	**10**	13,312,036	-	**ஏசீஏ-2(ii)**
	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	**11**	9,902,906	-	
-	மூலதன மாற்றல்கள்	**12**	68,676,650	-	
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	**13**	-	-	
-	திறன் விருத்தி	**14**	-	-	
-	ஏனைய மூலதனச் செலவினங்கள்	**15**	-	-	
-	**மொத்த மூலதனச் செலவினம் (எ)**		**91,891,592**	-	
	வைப்புக் கொடுப்பனவு		402,221	-	**ஏசீஏ-4**
	முற்பணக் கொடுப்பனவு		-	-	**ஏசீஏ-5**

	ஏனைய பிரதான பேரேடு			-	
	பிரதான பேரேட்டு செலவினம்		402,221	-	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		12,264,501,296	-	
-	**திசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)**		**(12,223,236,554)**		
	கட்டுநிதி சீராக்க கணக்கின்படி மீதி		**(12,223,236,554)**	-	**ஏசீஏ-7**
	திசம்பர் 31ல் உள்ளவாறான கட்டுநிதி மீதி				**ஏசீஏ-3**
				-	

3.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று ஏசீஏ -பீ

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

ஏசீஏ -பீ

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2021 ரூபா	2020 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	9,902,906	-
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	6,009,960	-
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3		-
மொத்த சொத்துக்கள்		**15,912,866**	-
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்			-
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		9,902,906	-
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ	6,009,960	
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4		-
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	0	-
மொத்தப் பொறுப்புக்கள்		0	-
		15,912,866	

பக்க இலக்கம் 08 முதல் 88 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 89 முதல் 96 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் /
பெயர்:	பெயர்:	பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பதவி :	பதவி :	பெயர் :
திகதி : 28.02.2022	திகதி : 2022/02/25	திகதி : 2022/02/25
Dr. S. H. Munasinghe Secretary Ministry of Health "Suwasiripaya" 385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10. Sri Lanka.	Sunethra Gunawardhana Secretary State Ministry of Primary Health Care, Epidemics and Covid Disease Control 2nd Floor, No. 525, Union Place, Colombo 02.	M. G. C. Pushpakumari Chief Accountant State Ministry of Primary Health Care, Epidemics and Covid Disease Control 2nd Floor, No. 525, Union Place, Colombo 02.

3.3 காசுப்பாய்ச்சல் கூற்று

2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று

	உள்ளவாறான	
	நடப்பாண்டு	முன்னைய ஆண்டு
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	93,314	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	-	-
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	41,810,000	-
முற்பணங்களை அறவிடல்	-	-
வைப்புக்களின் பெறுகை	402,222	-
தொழிற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**42,305,536**	**-**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	18,893,259	-
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	7,603	-
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	-	-
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	947,479	-
முற்பணக் கொடுப்பனவு		-
வைப்புக் கொடுப்பனவு	402,222	-
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**20,250,563**	**-**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**22,054,973**	**-**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	**-**	**-**
கழி - செலவிடப்பட்ட பணம்		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	22,054,973	-
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**22,054,973**	**-**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(22,054,973)**	**-**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	**(0)**	**-**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	**-**	**-**

கழி - செலவிடப்பட்ட காசு:		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	**-**	**-**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(எ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	**-**	**-**
ஜனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறான ஆரம்ப காசு மீதி	**-**	**-**
திசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	**-**	**-**

3.4 நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு : தொடர்புடையது அல்ல

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றல் : தொடர்புடையது அல்ல

ரூபா. 000

வருமான குறியீடு	வருமான குறியீட்டு விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமானம் மதிப்பீட்டின் சதவீதமாக %

3.6 ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாட்டை பயன்படுத்தும் செயலாற்றல்

ரூபா. 000

நிதிஏற்பாட்டு வகை	ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாடு		உள்ளவாறான செலவினம்	பயன்படுத்திய நிதிஏற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட இறுதி நிதிஏற்பாட்டின் சதவீதமாக %
	மொத்த ஏற்பாடு	இறுதி ஏற்பாடு		
மீண்டெழும்	12,450,700	12,440,700	12,172,207	97.80
மூலதனம்	273,000	283,000	91,891	32.47

3.7 நி.பி 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் திணைக்களங்கள் முகவராக இத்திணைக்களம் /மாவட்ட செயலகம்/ மாகாண சபைக்கு வழங்கிய நிதிஏற்பாடு : தொடர்புடையது அல்ல

ரூபா. 000

தொடர் இலக்கம்	நிதி ஏற்பாடு கிடைத்த அமைச்சு திணைக்களம்	நிதிஏற்பாட்டின் நோக்கம்	ஏற்பாடுகள்		உள்ளவாறான செலவினம்	பயன்படுத்திய நிதிஏற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட இறுதி நிதிஏற்பாட்டின் சதவீதமாக %
			ஆரம்ப நிதி ஏற்பாடு	இறுதி நிதிஏற்பாடு		

3.8 நிதியல்லாத சொத்துக்கள் அறிக்கையிடல் செயலாற்றல்

ரூபா. 000

சொத்து குறியீடு	குறியீட்டு விபரம்	2019.12.31 ஐபொருள் மெய்மையாய்வு அறிக்கை யின் பிரகாரம் மீதி	2019.12.31 உள்ளவாறு நிதி நிலைமையில் உள்ளவாறு மீதி	எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்குரிய	முன்னேற்றம் % ஆன அறிக்கையிடல்
9151	கட்டிடங்களும் அமைப்புக்களும்				
9152	இயந்திரங்கள்		9,902		
9153	காணி				
9154	கற்பனைச் சொத்துக்கள்				
9155	உயிர் விஞ்ஞான சொத்துக்கள்				
9160	நடைமுறை வேலை				
9180	குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்				

3.9 கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை

2022 மே 31

செயலாளர்,

சுகாதார அமைச்சு.

ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை எதிர்காலத்தில் வழங்படும்.இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும். ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகள் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 39 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உபபிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2. நிதி மீளாய்வு

2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

மீளாய்வாண்டிற்காக திட்டமிடப்பட்ட பிரகாரம் கோரப்பட வேண்டிய கட்டுநிதி தொகை ரூபா 65,376,800 ஆக இருந்த போதும் ரூபா 68,076,700 மாத்திரம் கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கட்டுநிதி திட்டமிடல் மூலம் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்ல. எவ்வாறாயினும் திறைசேரியால் வழங்கப்பட்டிருந்த கட்டுநிதி ரூபா 41,810,000 மாத்திரமாக இருந்தமையால் ரூபா 16,266,700 ஆன கட்டுநிதி வழங்காமையால் பாராளுமன்றத்தினால் திட்டமிடப்பட்டிருந்த நிதி ஏற்பாடு திட்டமிட்ட வகையில் பயன்படுத்த முடியாதிருந்தது.

2.2 செலவின முகாமைத்துவம்

நிதி பிரமாணம் 50 இன் இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக சரியான மற்றும் நடைமுறை ரீதியில் மதிப்பீடு தயாரிக்கப்படாதிருந்தமை கீழே கர்டப்பட்டுள்ள அவதானிப்புக்களின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது.

(அ) 02 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,000,000 ஆன மொத்த நிதிஏற்பாடும் நிதிப் பிரமாணம் 66 மற்றும் 69 மூலம் வேறு செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. மேலும் 02 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,500,000 ஆன மொத்த நிதிஏற்பாட்டில் 80 சதவீதத்திற்கு 90 சதவீதத்திற்கும் இடைப்பட்ட சதவீதமொன்று நிதிப் பிரமாணம் 66 மற்றும் 69 மூலம் வேறு செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது

(ஆ) 02 மீண்டெழும் செலவின விடயங்களுக்கும் 03 மூலதனச் செலவின விடயங்களுக்கும் முறையே ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 265,000,000 மற்றும் ரூபா 8,000,000 என்ற வகையில் நிதி ஏற்பாடு குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலமும் நிதிப் பிரமாணம் 66 மாற்றல் மூலமும் முறையே ரூபா 603,000,000 ஆலும் ரூபா 35,350,000 ஆலும் அதாவது 100 சதவீதம் முதல் 300 சதவீதம் வரையான வீச்சில் அதிகரிக்கப்பட்டிருந்தது.

(இ) 07 மீண்டெழும் செலவின விடயங்களுக்கும் 06 மூலதனச் செலவின விடயங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 61,500,000 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடுகளிலிருந்து ரூபா 900,000 தொகை ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றியதன் பின்னர் எஞ்சிய ரூபா 60,600,000 ஆன மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 03 மூலதனச் செலவின விடயங்களுக்கும் 17 மீண்டெழும் செலவின விடயங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 286,70,000 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடுகளிலிருந்து ரூபா 10,600,000 தொகை ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றியதன் பின்னர் எஞ்சிய ரூபா 276,100,000 ஆன மொத்த ஏற்பாட்டில் ரூபா 193,163,190 ஆன நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த சேமிப்பு சேமிப்பு நிதிஏற்பாட்டின் 50 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சினை எடுத்திருந்தது

2.3 பொறுப்புக்களுக்கு உட்படல்

2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செலுத்த வேண்டியிருந்த இராஜாங்க அமைச்சர் மற்றும் பதவியணியினரின் 2021 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களின் தொலைபேசி பட்டியல் மற்றும் ஏனைய கொடுப்பனவிற்குள்ள பட்டியல்களின் கூட்டுத்தொகை ரூபா 70,537 தொகை குறிப்பு (iii) படிவத்தின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) இராஜாங்க அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் ˙ மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்மைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) உள்ளக கணக்காய்வு செயற்பாடுகள் முறையாக நிறைவேற்றப்பட்டதா ஆக்கபூர்வமான நடைமுறையொன்று உள்ளதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

நிதிப்பிரமாணம் 835(3) இன் பிரகாரம் இராஜாங்க அமைச்சிற்காக அலுவலக இடவசதிகளை வழங்குவதற்காக 2021 ஒக்தோபர் 29 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட வாடகை உடன்படிக்கைக்காக சட்டமா அதிபரின் இணக்கத்தைப் பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

3.1.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

